www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kanchipuram Dt

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி பகுதி - அ மதிப்பெண்கள் : 90

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
2. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை
3. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
4. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
   அ) நற்பெயர் ஒரு புலனாகச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
   இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது
5. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
   அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு
   இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு
6. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு
   இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு
7. நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
   அ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
   இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) போக்கு ஆய்வு
8. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?
   அ) நீர்மை விகிதம் - விகிதாச்சாரம்
   ஆ) மொத்த இலாப விகிதம் - சதவீதம்
   இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம்
   ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்
9. Tally -ல் முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
   அ) அனாமத்து க/கு ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
   இ) விற்பனை க/கு ஈ) முதலீடுகள் க/கு
10. கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது
    அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் க/கு ஆ) மறுமதிப்பீட்டு க/கு
    இ) தொடரும் கூட்டாளி முதல் க/கு ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு க/கு
11. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
    அ) பத்திர முனைமக் க/கு ஆ) அழைப்பு முன்பணக் க/கு
    இ) பங்குமுதல் க/கு ஈ) பங்கு ஒறுப்பிழப்பு க/கு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. உரிமையாளரின் சொத்துகள் ரூ.85,000 மற்றும் பொறுப்புகள் ரூ.21,000 எனில் அவருடைய முதல் தொகை
அ) ரூ.85,000 ஆ) ரூ.1,06,000 இ) ரூ.21,000 ஈ) ரூ 64,000

13. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

14. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெற தகுதியுடையது
அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

15. 2017-ல் கணக்கேட்டின்படி இலாபம் ரூ.35,000 இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்ப திரும்ப நிகழா வருமானம் ரூ.1,000 மற்றும் 2017 -ம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரன நட்டம் ரூ.2,000 எனில் சரிக்கட்டப்பட்ட இலாபம்
அ) ரூ.36,000 ஆ) ரூ.35,000 இ) ரூ.38,000 ஈ) ரூ.34,000

16. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

17. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாத போது அது மாற்றப்படும் கணக்கு
அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

18. $F_{11}$ எனும் பயன்பாடு
அ) நிறுவனக் பண்புகூறுகள் ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
இ) நிறுவன கட்டமைப்பு ஈ) இவைகளில் எதுவும் இல்லை

19. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
அ) போக்குப்பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

20. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

| *பட்டியல் I* | | *பட்டியல் II* |
|---|---|---|
| i) நடப்பு விகிதம் | - | 1) நீர்மைத் தன்மை |
| ii) நிகர இலாப விகிதம் | - | 2) செயல் திறன் |
| iii) புற அகப் பொறுப்புகள் விகிதம் | - | 3) நீண்ட கால கடன் தீர்க்கும் திறன் |
| iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | - | 4) இலாபத்தன்மை |

*குறியீடுகள்:*

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. முழுமைப்பொறாப் பதிவேடுகள் என்றால் என்ன?

22. உயில் கொடை என்றால் என்ன?

23. 2018 -ம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ரூ.20,000. எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 10% எனக் கணக்கிடப்பட்டது. 2018 டிசம்பர் 31 அன்று எடுப்பு மீது வட்டி கணக்கிடவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு.
2015: 15,000, 2016: 17,000, 2017: 6,000 (நட்டம்), 2018: 14,000
4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

25. தியாக விகிதம் என்றால் என்ன?

26. சுனில் , சுமதி மற்றும் சுந்தரி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 3:3:4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுந்தரி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கு முழுவதையும் சுனில் எடுத்துக் கொள்கிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தை கணக்கிடவும்.

27. ரஞ்சித் நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் செலுத்துமாறு வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

28. நடைமுறை முதல் என்றால் என்ன?

29. கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.
   i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.55,00,000
   ii) அவ்வாண்டின் இறுதியில் நிலைச்சொத்துகள் ரூ.5,00,000

30. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

## பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31-ஆம் நாளைய முதல் கண்டறியவும்.
2018, ஜனவரி 1 அன்று முதல் ரூ.27,500, எடுப்பு ரூ.5,000
அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.2,500, அவ்வாண்டின் இலாபம் ரூ. 10,000

32. ஒரு மன்றத்தின் தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

| *விவரம்* | *1.1.2018* | *31.12.2018* |
|---|---|---|
| சந்தா பெறவேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப்பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ரூ.45,000

33. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

34. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.
   i) சராசரி இலாபம் ரூ.20,000
   ii) சாதாரண இலாபம் விகிதம் 10%
   iii) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.1,50,000

35. முன்னுரிமைப் பங்குகளுக்கும் , நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

36. வாசு மற்றும் தேவி இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் நிலா என்பவரை 1/4 இலாப பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். நிலா தன்னுடைய பங்காக ரூ.3,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 3:3:2. நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக்கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

37. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



38. பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்

| விவரம் | 2016-17 | 2017-18 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

39. Tally ERP.9 - ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

40. பின்வரும் நிலைகளில் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

நிலை 1: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.8,00,000 இயக்க இலாபம் ரூ 2,00,000

நிலை 2: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.20,00,000 இயக்க அடக்கவிலை ரூ 14,00,000

நிலை 3: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.10,00,000 மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25% இயக்க செலவுகள் ரூ 1,00,000

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த விற்பனை மற்றும் மொத்தக் கொள்முதல் கணக்கிடவும்:

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று இருப்புகள்:- | | 2019, மார்ச் 31 அன்று இருப்புகள்: | |
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | பற்பல கடனாளிகள் | 2,20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,50,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | பற்பல கடனீந்தோர் | 8,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| பிற தகவல்கள்: | | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 6,00,000 | | |
| அளித்த தள்ளுபடி | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 60,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,20,000 | | |
| சரக்களித்தோரால் அளிக்கப்பட்ட தள்ளுபடி | 10000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 |
| | | வாராக்கடன் | 16,000 |

(அல்லது)

ஆ) இராஜன் மற்றும் தேவன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்களின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | பல்வகைச் சொத்துகள் | 2,20,000 |
| இராஜன் | 1,00,000 | | | |
| தேவன் | 80,000 | 1,80,000 | | |
| இலாபநட்டப் பகிர்வு கணக்கு | | 40,000 | | |
| | | 2,20,000 | | 2,20,000 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2018, ஏப்ரல் 1 அன்று இராஜன் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ.40,000 மற்றும் 2018 செப்டம்பர் 1 அன்று தேவன் கொண்டு வந்த கூடுதல் முதல் 30,000. அவ்வாண்டின் எடுப்புகள் முறையே இராஜன் 20,000 தேவன் 10,000 ஆகும். அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் 70,000.

42. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

(அல்லது)

ஆ) அன்பு மற்றும் சங்கர் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 7:5 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கணிப்பொறி | 40,000 |
| அன்பு | 4,00,000 | | வாகனம் | 1,60,000 |
| சங்கர் | 3,00,000 | 7,00,000 | சரக்கிருப்பு | 4,00,000 |
| இலாப நட்ட க/கு | | 1,20,000 | கடனாளிகள் | 3,60,000 |
| கடனீந்தோர் | | 1,20,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 60,000 | | |
| | | 10,00,000 | | 10,00,000 |

பின்வரும் விவரங்கள் அடிப்படையில் இராஜேஷ் என்பவர் 1/5 பங்கிற்கு கூட்டாளியாக சேர்க்கப்பட்டார். நிறுவனத்தின் நற்பெயர் ரூ.75,000 என மதிப்பிடப்பட்டது. இராஜேஷ் நற்பெயரில் தன்னுடைய பங்கினை ரொக்கமாக கொண்டு வந்தார். இராஜேஷ் ரூ.1,50,000 முதலாகக் கொண்டு வந்தார்.

i) வாகனம் ரூ. 2,00,000, சரக்கிருப்பு ரூ.3,80,000, கடனாளிகள் ரூ. 3,50,000 என மதிப்பிடப்பட்டது.

ii) எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் ஈட்டு நிதி மீதான கோரிக்கை ரூ 10,000

iii) பதிவுறா முதலீடு ரூ. 50,000 கணக்கில் கொண்டுவரப்பட்டது.

மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இராஜேஷின் சேர்ப்பிற்கு பின் இருப்புநிலைக்குறிப்பையும் தயார் செய்யவும்.

43. அ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ii) பாலா ஒவ்வொரு மாதமும் ரூ.3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

iii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.10000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூ.50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்

(அல்லது)

ஆ) ஒரு கூட்டாண்மை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக ஈட்டிய நிகர இலாபங்கள் பின்வருமாறு:

2016: ரூ.20,000, 2017: ரூ.17,000, 2018: ரூ. 23,000

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.80,000. நிறுவனம் கொண்டுள்ள இடரினைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தப்பட்ட முதல் மீதான சாதாரண இலாப வீதம் 15% என கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

44. அ) சந்துரு, விஷால் மற்றும் ரமணன் என்ற கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அறைகலன் | | 60,000 |
| சந்துரு | 60,000 | | இயந்திரம் | | 1,20,000 |
| விஷால் | 70,000 | | பற்பல கடனாளிகள் | 33,000 | |
| ரமணன் | 70,000 | 2,00,000 | கழிக்க: ஐயக்கடன் ஒதுக்கு | 3,000 | 30,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 80,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 50,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 20,000 |
| | | 2,80,000 | | | 2,80,000 |

ரமணன் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2019, மார்ச் 31 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்

i) இயந்திரம் ரூ.1,50,000 என மதிப்பிடப்பட்டது

ii) அறைகலன் மதிப்பில் ரூ10,000 குறைக்கப்பட்டது

iii) ஐயக்கடன் ஒதுக்கு ரூ.5,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும்

iv) ஏடுகளில் பதியப்பெறாத முதலீடுகள் ரூ.30,000 தற்போது பதியப்பட வேண்டும்

v) மறுமதிப்பீட்டு இலாபம் ரூ. 48,000

கூட்டாளி விலகலுக்கு பிறகு உள்ள முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பைத் தயாரிக்கவும்

(அல்லது)

ஆ) கீழ்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கைரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொது செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8000 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கை கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ரூ.4,400) | | கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

45. அ) பின்வரும் தகவல்களிலிருந்து கவிதா நிறுமத்தின் போக்கு பகுப்பாய்வு சதவீதங்களை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

*(அல்லது)*

ஆ) கஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ.10 வீதம் 40,000 பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ.2 ஒதுக்கீட்டின் போது ரூ.5 மற்றும் முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3 என தொகை செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 40,000 பங்குகளுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக உள்ள விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது. அனைத்து தொகையும் முறையாக பெறப்பட்டன எனக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவினை தரவும்.

46. அ) அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| *விவரம்* | *1.4.2017* | *31.3.2018* |
|---|---|---|
| வங்கி இருப்பு | 14,000 (வ்) | 18,000 (ப) |
| கை ரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

அகமது தனது சொந்த பயனுக்காக ரூ. 40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுப்படுத்துவதற்காக அவர் ரூ. 16,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



*(அல்லது)*

ஆ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு

i) ஈட்டிய இலாபங்கள் 2016: ரூ.25,000, 2017: ரூ. 23,000 மற்றும் 2018: ரூ. 26,000

ii) 2016 -ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்ப திரும்ப நிகழா வருமானம் ரூ.2,500 சேர்ந்துள்ளது.

iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ.3,500 குறைக்கப்பட்டது.

iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.250 என மதிப்பிடப்பட்டது

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

47. அ) பின்வரும் நடவடிக்கைகளை Tally-ல் பதிவு செய்யவும்

i) ரூ. 4,00,000 முதலுடன் தேவி தொழில் தொடங்கினார்

ii) இந்தியன் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ரூ. 60,000 செலுத்தியது

iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ரூ.15,000

iv) சுமதியிடம் இருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ.50,000

v) ரொக்க விற்பனை மேற்கொண்டது ரூ.10,000

*(அல்லது)*

ஆ) நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கையிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) இயக்க அடக்கவிலை விகிதம் (iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

| *இலாப நட்ட அறிக்கை* | |
|---|---|
| *விவரம்* | ரூ. |
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III. மொத்த வருவாய் (I + II) | 20,200 |
| IV. செலவுகள் | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 17,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–) 1,000 |
| நிதிசார் செலவுகள் | 300 |
| இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 2,400 |
| மொத்த செலவுகள் | 18,700 |
| V. அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 1,500 |

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com